# True Disciple

# உண்மை சீஷன்

July - September 2022 ஜுலை - செப்டம்பர்

A Quarterly News Bulletin of City Revival AG Church



## உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு

## Prepare to meet your God

ஆமோஸ் 4 : 12 Amos

# இயேசு சீக்கிரம் வருகிறார்

பாஸ்டர். ஜெரி டேனியல்



"இயேசு சீக்கிரம் வருகிறார்" வெளி. 22 : 7, 20.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, இயேசுவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்! ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சீக்கிரமாய் வரப்போகிறார். அவருடைய இரண்டாம் வருகையைக் குறித்து வேதம் அதிகமாக நமக்குக் கூறுகிறது. இதைக் குறித்துச் சிந்திப்பது நம்மை அவருடைய வருகைக்கு ஆயத்தமாக்க உதவியாயிருக்கும். முழு வேதத்திலும் 1845 இடங்களில் இரண்டாம் வருகையைக் குறித்துச் சொல்லப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் 318 வசனங்கள் இதைக் குறித்துக் கூறுகின்றன. புதிய ஏற்பாட்டில் 23 புஸ்தகங்களில் இந்த மகிமையான நிகழ்வைக் குறித்துக் கூறப்பட்டுள்ளது. இயேசு மெய்யாகவே சீக்கிரம் வருகிறார். இனி காலம் செல்லாது. (வெளி. 10 : 6).

## 1. இரண்டாம் வருகையின் வாக்குத்தத்தங்கள்
## (THE PROMISE OF THE SECOND COMING)

இயேசு, 'நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்தில் நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்' என்றார் (யோவான் 14 : 3). இயேசு பரம் ஏறிய பின் தூதர்கள், 'உங்களிடத்திலின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்' என்றார்கள் (அப். 1:8). அப்போஸ்தலனாகிய பவுல், 'கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்' என்று கூறுகிறார் (1தெச. 4 : 16).

## 2. இரண்டாம் வருகையின் நோக்கம்
## (THE PURPOSE OF THE SECOND COMING)

- தம்முடைய வாக்குத்தத்தத்தையும் தீர்க்கதரிசனங்களையும் நிறைவேற்றுவதற்கு வருகிறார் (வெளி. 22 : 12, 20; யோவான் 14 : 3). இயேசுவின் இரண்டாம் வருகையைக் குறித்துப் பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் நூற்றுக்கணக்கான தீர்க்கதரிசனங்கள் கூறப்பட்டுள்ளன. அவையனைத்தையும் நிறைவேற்றும்படி இயேசு சீக்கிரம் வருகிறார்.
- மரித்த அனைவரையும் எழுப்பவும் உயிரோடிருக்கும் பரிசுத்தவான்களை மறுரூபப்படுத்தவும் இயேசு வருகிறார் (1 தெச. 4 : 16; 1 கொரி. 15 : 51,52).
- தேவ ஜனங்களுக்குப் பலனளிக்கும்படி இயேசு வருகிறார். அவனவன் கிரியைகளுக்குத் தக்க அவனவனுக்கு பலனளிப்பார் என வேதம் கூறுகிறது (மத். 16 : 27 ; வெளி. 22 : 12).

- தேவனை அறியாதவர்களுக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படி இயேசு வருகிறார் (1தெச.1:7; யோவான் 5:28, 29).
- தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபித்து என்றென்றும் பூமியில் அரசாட்சி செய்யும்படி வருகிறார் (தானி. 7:14 ; வெளி. 9:11, 16)

### 3. இரண்டாம் வருகையின் நேரம் (THE PERIOD OF THE SECOND COMING)

இயேசு கிறிஸ்து வரும் நாளையாவது நாழிகையாவது ஒருவனும் அறியான் (மாற்கு 13 : 32). திருடன் வருகிற விதமாய் கர்த்தருடைய நாள் வருமென்று வேதம் சொல்லுகிறது (1தெச. 5 : 2). ஆகவே இயேசு கிறிஸ்துவினுடைய வருகைக்கான நாளைக் குறிப்பது முட்டாள்தனமானது. வேதத்திற்குப் புறம்பானது. ஆகிலும் கடந்த நாட்களில் பலர் இயேசு இந்த நாளில் வருவாரென்று கூறி ஏமாந்து போயுள்ளனர்.

வேதம் அவருடைய வருகைக்கு முன் நடைபெறும் சில அடையாளங்களைக் கூறியுள்ளது (2 தீமோ. 3:1-5; மத். 24: 4-12). இந்த அடையாளங்கள் இயேசு சீக்கிரம் வரப்போகிறார் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள் ஒருவரையொருவர் மாராநாதா அல்லது கர்த்தர் வருகிறார் என்று கூறி வாழ்த்தினர் (1 கொரி. 16 : 22). முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களே அவருடைய வருகையை அதிகமாக எதிர்பார்த்தவர்கள் என்று சொன்னால். நாம் எவ்வளவு அதிகமாக எதிர்பார்த்து ஆயத்தமாக வேண்டும். வருகிறவர் இன்னும் கொஞ்சக்காலத்தில் வருவார். தாமதம்பண்ணார் (எபி. 10:37).

### 4. இரண்டாம் வருகைக்கு ஆயத்தப்படுதல் (THE PREPARATION FOR THE SECOND COMING)

நாம் அவருடைய வருகைக்கு ஆயத்தப்படுவதற்குப் பல வழிகளை வேதம் நமக்குக் கூறுகிறது. அவைகளில் சிலவற்றை நாம் இங்கே பார்போம்.

**பரிசுத்தமாயிருங்கள் : Purify Yourself**

அவருடைய வருகைக்கு ஆயத்தமாவதற்குப் பரிசுத்தம் மிகவும் அவசியம் என்று வேதம் வலியுறுத்துகின்றது. அவர் மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிற எவனும் அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறது போலத் தன்னையும் சுத்திகரித்துக் கொள்ளுகிறான் என்று 1 யோவான் 3 : 3 கூறுகிறது. பரிசுத்தமில்லாமல் ஒருவனும் அவரை தரிசிப்பதில்லை (எபி. 12 : 14 ). உலகத்தில் இன்று பாவம் பெருகிக் கொண்டு இருக்கிறது. ஆனால் தேவன் தம்முடைய ஜனங்கள் பரிசுத்தத்தில் வளரவும், பெருகவும் வேண்டுமென்று விரும்புகிறார் (வெளி. 22:11, 12).

நாம் பரிசுத்தமாய் வாழ்வதற்குத் தேவன் நமக்கு அவருடைய சுத்திகரிக்கும் இரத்தம் (1யோவான் 1:7), அவருடைய வார்த்தை (சங். 119:9, யோவான் 17 : 17) மற்றும் பரிசுத்த ஆவியானவரை (2 தெச. 2 : 15) நமக்கு உதவியாகத் தந்திருக்கிறார். நாம் நம்முடைய பேச்சு, சிந்தை, செயல்,

உறவுகள் அனைத்திலும் பரிசுத்தத்தைக் காத்துக் கொண்டு கறைதிரையற்ற மணவாட்டியாக ஆயத்தமாயிருக்க வேண்டும் (பிலி. 1 : 10, 11; 1 தெச. 5 : 23 ; எபே. 5 : 27 ; 2 பேதுரு 3 : 11).

**ஜெபத்தில் விழித்திருங்கள் : Pray with watchfulness**

நாம் அவருடைய வருகைக்கு ஆயத்தமாவதற்கு எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருக்க வேண்டும் என்று இயேசு கூறுகிறார் (லூக். 21 : 36 ). இன்று உலகம் மிகவும் துரிதமாகச் சென்று கொண்டிருக்கிறது. பல வேலைகளை வேகமாகச் செய்வதற்குப் பல கருவிகள் இருந்த போதிலும் ஜனங்களுக்கு நேரம் குறைவாகவே காணப்படுகிறது. இதில் அதிகமாகப் பாதிக்கப்படுவது ஜெப நேரம். நாம் அதிக கவனத்துடன் விழித்திருக்க வேண்டுமென்று 10 கன்னிகைகள் உவமைகளில் இயேசு போதிக்கிறார் (மத். 25 : 1-13 ). அவருடைய சமூகத்தில் அதிக நேரம் காத்திருக்கும் போது ஆவிக்குரிய வாழ்க்கையில் அதிக விழிப்புள்ளவர்களாக இருப்போம். இரண்டாம் வருகையைக் குறித்துப் பவுல் எழுதும்பொழுது இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள் என்று கூறுகிறார் (1 தெச. 5 : 17). அப்போஸ்தலனாகிய பேதுரு எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று. ஆகவே ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதையாயிருங்கள் ( 1 பேதுரு 4 : 7 ) என்று எச்சரிக்கிறார். உங்களது செல்போன் மற்றும் தற்கால தொழில்நுட்ப கருவிகள் உங்கள் ஜெப நேரத்தை திருட இடமளிக்காதீர்கள்.

**சுவிசேஷத்தை அறிவியுங்கள் : Proclaim the Gospel**

அப்போஸ்தலனாகிய பவுல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தமாக, சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் திருவசனத்தை ஜாக்கிரதையாய்ப் பிரசங்கம் பண்ணு என்று தீமோத்தேயுவிற்குக் கட்டளையிடுகிறார் (1 தீமோ. 4 : 2). நாம் பரிசுத்தமாயிருந்து, விழித்திருந்து ஜெபிப்பதோடு, சுவிசேஷத்தையும் துரிதமாய் அறிவிக்க வேண்டும். எல்லா ஜனங்களும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பது இயேசுவினுடைய சித்தம் (2 பேதுரு 3 : 9). இந்த இராஜ்யத்தின் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல மக்களுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும். அப்பொழுது முடிவு வரும் என்று இயேசு கூறினார் (மத். 24 : 14). அவருடைய சுவிசேஷத்தை வெட்கப்படாமல் அறிவிக்க வேண்டும் (ரோமர் 1 : 16). சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ என்று பவுல் கூறுகிறார் ( 1 கொரி. 9 : 16 ). மனுஷன் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன். மனுஷன் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவிற்கு முன்பாக அறிக்கை பண்ணுவேன் என்று இயேசு கூறினார் ( மத்.10 : 32, 33). தேவன் நமக்கு அவருடைய ஊழியத்தைச் செய்வதற்குத் தாலந்துகளையும், வரங்களையும் தந்திருக்கிறார். அவைகளை நாம் புதைத்துப் போடாமல், உண்மையாய்ப் பயன்படுத்தி அவருடைய வருகைக்குப் பாத்திரவான்களாய் மாறுவோம் (மத். 25 : 14 – 30). மாராநாதா!

# ஜெபத்தில் காணப்பட வேண்டிய '4' எல்லாம்

*"எந்தச் சமயத்திலும், சகலவிதமான வேண்டுதலோடும், விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மன உறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள்" (எபேசியர் 6:18).*

இந்த வசனத்தில் அதிகம் பயன்படுத்தப்படும் வார்த்தை 'சகல' 'எல்லா' (all) என்பதாகும். இந்த ஒரு வசனத்தில் மட்டும் 4 வகையான 'எல்லா' (all) என்ற பொருள்படும் வார்த்தை உள்ளது.

**1. எல்லா நேரத்திலும்**

உண்மையான விசுவாசி தொடர்ந்து எல்லா நேரத்திலும் ஜெப சிந்தனையோடு வாழ்கிறார். இதைத் தான் தெசலோனிக்கேயருக்கு எழுதும் நிருபத்தில் "இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்" (1 தெச 5:17) என்று பவுல் எழுதுகிறார். ஆம் நாம் தேவனோடு உரையாடுதல் இடைவிடாமல் எப்போதும் இருக்கும் பழக்கமாய் இருக்க வேண்டும் (அப் 10:2; 12:12). எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள் என்று இயேசு கூறுகிறார் (லூக்கா 21:36).

**2. எல்லாவித ஜெபத்திலும்**

நம் வாழ்வே ஜெப வாழ்வாய் இருப்பதால், நம் ஜெபங்களும் பல வகைப்பட்டதாக இருக்கிறது. ஒரு கிறிஸ்தவனின் ஜெபம் கிரமமாகவும், திட்டமிடப்பட்டதாகவும், குறிப்பானதாகவும் இருக்க வேண்டும். அவசர தேவைகளுக்கும் ஜெபிக்க ஆயத்தமாக இருக்க வேண்டும். நம்முடைய ஜெபங்கள் சில துதிகள் நிறைந்தும், ஆராதனைக்குரியதாகவும் மற்றும் பாவ அறிக்கை உள்ளதாகவும் இருக்கலாம். நாம் ஆவியோடு ஜெபிப்பதையும், உபவாசித்து ஜெபிப்பதையும், மன்றாடி ஜெபிப்பதையும், நன்றி செலுத்தி ஜெபிப்பதையும், பாவ அறிக்கை செய்து ஜெபிப்பதையும், போராடி ஜெபிப்பதையும்,பயிற்சி செய்ய வேண்டும். இவற்றைத் தான் 'எல்லாவித ஜெபத்தோடும்' என்ற வார்த்தைகளால் அப். பவுல் குறிப்பிடுகிறார்.

**3. எல்லாவித மன உறுதியோடும்**

இது நாம் சோர்ந்துபோகாமல் ஜெபிக்க வேண்டும் என்பதைக் குறிக்கிறது. ஜெபித்தல் என்பது இயல்பாக காணப்படுவதோ அல்லது எளிதான காரியமோ அல்ல. ஜெபிப்பதற்கு கடின உழைப்பும், விடாமுயற்சியும் தேவை. எல்லாவித மன உறுதியும் தேவை. நீங்கள் யாருக்காக ஜெபிக்கிறீர்கள்? சோர்ந்துபோகாமல் ஜெபியுங்கள். நாம் இடைவிடாமல், விடா முயற்சியுடன் ஜெபிக்க வேண்டும் என்று இயேசு கற்பித்துள்ளார் (மத்தேயு 7:7; லூக்கா 18:1-8).

**4. எல்லா பரிசுத்தவான்களுக்காகவும்**

எல்லோருக்கும் நம் ஜெபம் தேவை. குறிப்பாக மற்ற விசுவாசிகளுக்காகவும், பரிசுத்தவான்களுக்காகவும் ஜெபித்தல் வேண்டும். தேவனுக்கு மிகப் பெரிதானதோ, அல்லது அற்பமானதோ எதுவும் கிடையாது. நாம் சில நேரங்களில் மட்டும், சிலருக்காக மட்டும், சில வகை ஜெபங்கள் மட்டும் ஜெபிக்கிறோம். ஆனால் தேவன் எல்லாவற்றிற்காகவும், எல்லாருக்காகவும், எல்லா நேரங்களிலும் நாம் ஜெபிக்கவேண்டுமென்று விரும்புகிறார்.

# சபை வளர்ச்சியில் விசுவாசியின் பங்கு

திருச்சபை வளரவும் தேவ ராஜ்யம் விரைவில் கட்டப்படவும் ஒவ்வொரு விசுவாசியும் தன்னுடைய பங்கை நிறைவேற்ற வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். கீழ்க்கண்ட ஏழு காரியங்களை ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும் தன்னுடைய ஸ்தல சபையிலும், ஸ்தல சபைக்காகவும் செய்யும்போது அந்த சபை ஆசீர்வதிக்கப்படும் மற்றும் ஆசீர்வாதமாக மாறும்!

**1. ஜெபத்தில் உறுதியாயிருங்கள்**

ஒரு ஸ்தல சபையின் ஆசீர்வாதத்திற்காகவும் வளர்ச்சிக்காகவும் ஒரு விசுவாசி செய்யும் மிகப் பெரிய காரியம் ஜெபம். 1 தீமோ.2:1ல் நாம் எல்லாருக்காகவும் ஜெபம்பண்ண வேண்டும் என்றும், எபேசியர் 6:18ல் நாம் சகல பரிசுத்தவான்களுக்காகவும் ஜெபம் பண்ண வேண்டும் என்று அப். பவுல் கூறுகிறார். ஒரு ஸ்தல சபையின் வெற்றி அந்த சபை விசுவாசிகளின் ஜெபத்தில் தான் இருக்கிறது (யாத். 17:8-13).உங்கள் சபை போதகருக்காக தினமும் ஜெபியுங்கள். தேவன் அவரை ஊழியத்தில் வல்லமையாக பயன்படுத்தவும், சபையை தேவ சித்தத்தின்படி நடத்த நல்ல சுகம், ஞானம், அபிஷேகம், கிருபைகளை தேவன் தரும்படியாகவும் ஜெபியுங்கள். சபை மூப்பர்கள், தலைவர்கள், விசுவாசிகள் அனைவருக்காகவும் ஜெபியுங்கள். சபையின் எழுப்புதலுக்காகவும், வளர்ச்சிக்காகவும் தினமும் ஜெபியுங்கள்.

**2. சபை கூடி வருதலை விட்டுவிடாதிருங்கள்**

சபை கூடிவருதலை ஒருபோதும் விட்டுவிடாதீர்கள் (எபிரெயர்.10:25; ஏசாயா 58:13). வாரத்தின் முதல் நாளை தேவனுக்கு கொடுத்து, தேவ ஜனங்களோடு ஜெபிப்பதற்கும், ஆராதிப்பதற்கும், வசனத்தை கேட்பதற்கும் முக்கியத்துவம் கொடுங்கள். ஒவ்வொரு ஞாயிறும் விசுவாசத்தோடும் எதிர்ப்பார்ப்போடும் ஆராதனைகளில் பங்குபெறுங்கள். தேவன் உங்களோடு பேசும்படி ஜெபத்தோடு செல்லுங்கள். போதகர் பேசும் செய்திகளை குறிப்பெடுக்க நோட்டு, பேனா கொண்டுசெல்லுங்கள். தேவன் உங்களோடு பேசிய காரியத்திற்கு உடனடியாக கீழ்ப்படிய ஒப்புக்கொடுங்கள். சரியான நேரத்திற்கு ஆலயத்திற்குச் செல்ல பிரயாசப்படுங்கள். என்னை கனம்பண்ணுகிறவர்களை நான் கனம்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார் (1சாமு. 2:30)

**3. அன்பு காட்டுங்கள்**

சபையில் எல்லாரிடமும் அன்பாயிருங்கள். மற்றவர்கள் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள் (மத்தேயு. 7:12). வார்த்தையினாலும் கிரியையினாலும் அன்பு கூறுங்கள். விசுவாசிகளை உற்சாகப்படுத்துங்கள், மன்னியுங்கள், உங்களால் இயன்றமட்டும் தேவையுள்ளவர்களுக்கு உதவி செய்யுங்கள். மனத்தாழ்மையினாலே மற்றவர்களை உங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணுங்கள் (பிலி. 2:3). ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்று புதிய ஏற்பாட்டில் 16 முறை கூறப்பட்டுள்ளது. சபைக்கு புதிதாக வருகிறவர்கள் விசுவாசிகளிடத்தில் தேவ அன்பை கிரியையில் காண விரும்புகிறார்கள்!.

**4. ஒற்றுமையை காத்துக்கொள்ளுங்கள்**

சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்ளுவதற்கு ஜாக்கிரதையாயிருங்கள் என்று வேதம் கூறுகிறது (எபேசியர். 4:3). ஒற்றுமை தேவனுடைய ஆசீர்வாதங்களை சபைக்குள் கொண்டு வருகிறது. ஆனால் பிரிவினை, சண்டை, பொறாமை, வாக்குவாதம் இவைகள் திருச்சபையை அழிக்க சாத்தான் உபயோகிக்கும் கருவிகள். ஆகவே சகலவித புறங்கூறுதல்கள்,

கோபங்கள், கசப்புகள் ஆகியவைகளை ஒழித்துவிடுங்கள் (எபே. 4:31). தேவன் நமக்கு ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை தந்திருக்கிறார் (2 கொரி. 5:18). யாவரோடும் சமாதானமாயிருங்கள் (ரோமர் 12:18). சமாதானத்துக்கு அடுத்தவைகளையும், அந்நியோந்நிய பக்திவிருத்தி உண்டாக்கத் தக்கவைகளையும் எப்பொழுதும் நாடுங்கள் (ரோமர் 14:19).சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள் என்று இயேசு கூறுகிறார் (மத்தேயு. 5:9)

**5. வரங்களைப் பயன்படுத்துங்கள்**

தேவன் இரட்சிக்கப்பட, அபிஷேகம் பெற்ற ஒவ்வொரு விசுவாசிக்கும் வரங்களை தந்திருக்கிறார். உங்கள் வரங்களை கண்டுபிடித்து சபையின் பிரயோஜனத்திற்காக பயன்படுத்துங்கள். பார்வையாளராக இராமல் ஊழியம் செய்கிறவர்களாக இருங்கள் (1கொரி. 12:8-10, 1பேதுரு. 4:10, ரோமர் 12:6-8). உங்கள் தாலந்துகளைப் புதைத்து வைக்காதீர்கள் (மத்.25:18). தேவன் உங்களுக்கு கொடுத்த வரத்தை அனல்மூட்டி எழுப்பி விடுங்கள் (2 தீமோ. 1:6). உங்களால் இயன்றமட்டும்போதகரோடு சேர்ந்து ஊழியம் செய்து, சபை தரிசனத்தை நிறைவேற்றுங்கள். பராமரிப்புக் குழு, ஜெபக்குழுக்களில் இணைந்து செயல்படுங்கள். சபையில் நடைபெறும் பயிற்சி வகுப்புகள், வேதப்பாடங்களில் பங்கு பெற்று உங்கள் திறமைகளை வளர்த்துக்கொள்ளுங்கள். ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார் என்று இயேசு சொன்னார் (யோவான் 12:26).

**6. பணத்தை முதலீடு செய்யுங்கள்**

நீங்கள் பங்குபெறும், உங்கள் ஆத்துமாவை போஷிக்கும், உங்களை பராமரிக்கும் ஸ்தல சபையில் உங்கள் முழு தசமபாகத்தையும் செலுத்த வேண்டும் (மல்கியா 3:8-12). உங்கள் முதற்பலன்களை கர்த்தருக்கு கொடுத்து அவரை கனம்பண்ணுங்கள் (நீதி.3:9,10). உற்சாகமாக ஊழியத்தின் தேவைகளுக்கு கொடுங்கள் (2கொரி 9:7). நம்முடைய பணத்தை தேவ ராஜ்யத்தில் மூலதனம் செய்யாமல், விதைக்காமல் பொருளாதார ஆசீர்வாதத்தை, அறுவடையை நாம் ஒருபோதும் பெற முடியாது. சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன், பெருக அறுப்பான் (2கொரி 9:6) என்று வேதம் கூறுகிறது.

**7. ஆத்தும ஆதாயம் பண்ணுங்கள்**

நீங்கள் பூமிக்கு உப்பாகவும், உலகத்திற்கு வெளிச்சமாகவும் இருக்கிறீர்கள் (மத்தேயு.5:13,14). நாம் இருக்கும் இடங்களில் தேவனுக்கு சாட்சியாக வாழ்ந்து, சுவிசேஷம் கூறி, ஆத்துமாக்களை ஆதாயம் செய்ய வேண்டும். இயேசுவின் பிரதான கட்டளையை (மத்தேயு.28:18-20) நிறைவேற்ற பிரயாசப்படாத எந்த கிறிஸ்தவனும் கிறிஸ்துவின் ஜீவன் இல்லாதவன். ஆத்தும ஆதாயம் செய்யாதவன் எளிதாக பின்வாங்கி போவான். உங்கள் உற்றார், உறவினர்கள், உடன் வேலையாட்களை நண்பர்களாக்கி, அவர்களின் இரட்சிப்பிற்காக ஜெபித்து, ஆதாயம் செய்து, சபைக்கு அழைத்துச் செல்லுங்கள். சுவிசேஷகனுடைய வேலையை தொடர்ந்து செய்யுங்கள் (2 தீமோ. 4:5 மாற்கு 16:15). இந்த வருடத்தில் இரண்டு பேரையாவது இலக்கு வைத்து, இரட்சிப்புக்குள் நடத்தி, ஞானஸ்நானம் பெற செய்து, சீஷராக்க தீர்மானியுங்கள்!

மேற்கூறிய இந்த ஏழு காரியத்தையும் நீங்கள் செய்ய தீர்மானிக்கும் போது மட்டுமே, திருச்சபையின் தூண்களாக நீங்கள் மாற முடியும். மேலும் இவற்றை செய்யும் போது, நமதுதிருச்சபை வேகமாக வளரும், மகிழ்ச்சியும் வல்லமையும் சபையில் காணப்படும், தேவ ராஜ்யம் கட்டப்படும்! கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

*பாஸ்டர். ஜெரி டேனியல்*

# நரகத்திலிருந்தும் சொர்கத்திலிருந்தும் குரல்கள்!

- நீங்கள் என் அண்டை வீட்டிலிருந்தீர்கள் ; நீங்கள் கோவிலுக்குப் போவதைப் பார்ப்பேன். நான் குழந்தையாயிருந்தேன்; என் பெற்றோர் கடவுள்களை வழிபட பல இடங்களுக்கு அழைத்துச் செல்வர். ஒரு கருப்பு புத்தகத்தை எடுத்துச் செல்வீர்கள்; அது பைபிள் என்று பின்பு அறிந்தேன். இப்போது நான் நரகத்தில் அலறிக்கொண்டிருக்கிறேன். நீங்களோ பரலோகத்தில் மகிழ்ந்திருக்கிறீர்கள். ஏன் எனக்கு நீங்கள் மோட்சம், நரகம் குறித்து அறிவிக்கவில்லை? பல்லாண்டுகள் அயலாராக வாழ்ந்தோமே. நேரம் கிடைக்கவில்லையா? நான் எங்கு போனால் என்ன என்று நினைத்து விட்டீர்களா? எனக்கு நீங்கள் அக்கறை காட்டாமல் போனது ஏனோ, ஐயோ ஏனோ?
- என் மளிகைக் கடைக்கு நீங்கள் எப்போதும் வருவீர்கள். நான் கனிவோடும் புன்முறுவலோடும் உங்களுக்கு உதவினேன். உங்கள் கடவுளைப் பற்றிச் சொன்னால் நான் எதிர்த்து விடுவேன் என்று என் முகம் காட்டியதோ? இல்லை மேடம், கடவுளைத் தேடி ஊர் ஊராகத் திரிந்தேன். ஒரு விபத்தில் உயிரிழந்து இந்தக் கொடூரமான இடத்திற்கு வந்து சேர்ந்தேன். பிசாசுகள் என்னைச் சித்ரவதைச் செய்கின்றன. உங்களைத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். உங்கள் கடவுளைக் குறித்த துண்டுப்பிரதியையோ ஒரு புத்தகத்தையோ எனக்குக் கொடுத்திருப்பீர்களானால் நரகத்திற்குத் தப்பித்திருப்பேன். ஏன் மேடம் என்னிடம் இவ்வளவு கொடூரமாக நடந்து கொண்டீர்கள்?
- உங்களோடு கூட மூன்று மணி நேரம் ரயிலில் பயணித்தேன். நீங்கள் என் அருகில் அமர்ந்திருந்தீர்கள். உங்கள் வேதத்தை வாசித்தீர்கள். உங்கள் கடவுளைக் குறித்தும் பைபிளைக் குறித்தும் அறிய குறுகுறுப்பாயிருந்தது. என்னிடம் நன்றாகப் பேசினீர்கள். உங்கள் தின்பண்டங்களைக் கூடப் பகிர்ந்து கொண்டீர்கள். ஆனால் உங்கள் கடவுளைக் குறித்துப் பேசவேயில்லை. இப்போது உங்கள் கடவுள்தான் மெய்யான கடவுள் என்று அறிந்து கொண்டேன். ஏன் நீங்கள் மதத்தைக் குறித்துப் பேசவில்லை? இப்போது நரகத்தில் எரிந்து கொண்டிருக்கிறேன். ஏன், ஐயோ, ஏன்?
- டீச்சர், இரண்டு ஆண்டுகள் உங்களிடம் படித்தேன். பின்பு வேறு வகுப்பிற்குச் சென்றாலும் அவ்வப்போது உங்களைச் சந்தித்தேன். நான் பதினோராம் வகுப்பு படிக்கும்போது புற்றுநோய்க்குப் பலியானேன். என் மேடம் என்னிடம் இத்தனை இரக்கமற்றவராய் நடந்து கொண்டீர்கள்? பாசமாய் எனக்குப் பாடங்களைக் கற்றுக் கொடுத்தீர்களே. ஆனால் வாழ்க்கையிலிலேயே மிக முக்கியமான சத்தியத்தைக் கண்டுபிடிக்க அது எனக்கு உதவவில்லையே. இப்போது புழுக்களுடன் புரளுகிறேன். நீங்கள் போகும் அழகிய இடத்தைக் கனாக் காண்கிறேன். உலகத்திலேயே மிகப்பெரிய உண்மையை மறைத்து ஏன் என்னை ஏமாற்றிவிட்டீர்கள் மேடம்? ஐயகோ, என்ன செய்வேன்?
- டாக்டரைப் பார்க்கக் காத்திருந்தபோது நீங்கள் என் அருகில் அமர்ந்திருந்தீர்கள். வாழ்க்கையில் நரக வேதனையை அனுபவித்துக் கொண்டிருந்த என்னை, தற்கொலை எண்ணம் ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தது. இயேசுவைத் தெரியுமா என்று திடீரென்று கேட்டீர்கள். பிறகு இயேசுவை நம்பினால் சமாதானம் பெறலாம் என்றீர்கள். உங்கள் வீட்டிற்கு வந்து உங்களுடன் பேசலாமா என வினவினேன். மருத்துவரைப் பார்த்துவிட்டு வீட திரும்ப நேரமாகும் என்றீர்கள். காத்திருக்கிறேன் என்றேன். என்னை உங்கள் வீட்டிற்கு அழைத்துச் சென்றீர்கள். அங்கே முழந்தாழிட்டு இயேசுவை என் இரட்சகராக ஏற்றுக் கொண்டேன். வேதம் ஒன்றைக் கொடுத்தீர்கள். இப்போது தகப்பனாகிய கடவுளோடும் அவரது மகனாகிய இயேசு கிறிஸ்துவோடும் மற்ற எல்லாத் தேவ பிள்ளைகளோடும் பரலோகில் இருக்கிறேன். உங்களைக் கட்டி அணைத்து நன்றி சொல்லக் காத்திருக்கிறேன். என்னிடம் பேச தைரியமாக உங்கள் வாயைத் திறவாதிருந்திருப்பீர்களானால்! இலவசமாய்க் கொடுப்பதற்கு பைபிளின் விலை அதிகமே எனக் கணக்குப் போட்டிருப்பீர்களானால்! இன்று நரகத்தில் துடித்துக் கொண்டிருப்பேன். நன்றி ஐயா, ஒரு கோடி நன்றி!

## வாலிபனே! நீ எங்கே இருக்கிறாய்?

அன்புள்ள வாலிபர்களுக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். வேதத்தில் ஏறத்தாழ 3000க்கும் அதிகமான கேள்விகள் உண்டு. நம் வாழ்க்கையில் ஏற்படும் எல்லா கேள்விகளுக்கும் வேதத்தில் பதில் உண்டு. ஆனால், வேதத்தில் தேவன் மனிதனைப் பார்த்து கேட்ட முதல் கேள்வி ஆதி.3:9ம் வசனத்தில், 'நீ எங்கே இருக்கிறாய்? (Where are You?)' என்று ஆதாமைக் கூப்பிட்டார். ஆதாம் தேவனுடைய சாயலில் உருவாக்கப்பட்டவன். தேவன் தோட்டத்தின் நடுவில் உலாவுகிற நேரத்தில் தேவனோடு அவருடைய பிரசன்னத்தில் இருந்தவன். தேவனுடைய சத்தத்தைக் கேட்டு அவரோடு உறவாடி வந்தவன். தேவன் தந்த சகல ஆசீர்வாதத்தினாலும் ஆசீர்வதிக்கப்பட்டவன். இப்படி தேவனோடு ஐக்கியப்பட்ட மனிதனைப் பார்த்து, தேவன், 'நீ எங்கே இருக்கிறாய்?' என்று கேட்கிறார்.

தேவன் வைத்த ஏதேன் தோட்டத்தில் தான் ஆதாம் இருந்தான். தேவன் தனக்குத் தந்த மனைவியுடன் (குடும்பத்துடன்) தான் ஆதாம் இருந்தான். தேவன் தந்த சகல ஆசீர்வாதங்களுக்கு மத்தியில் தான் ஆதாம் இருந்தான். ஆனால் தேவன் விரும்பும் அவருடைய சந்நிதியில் ஆதாம் இல்லை. மாறாக, கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி ஓடி தன்னை ஒளித்துக்கொண்டான். (ஆதி.3:8) என்று வேதத்தில் வாசிக்கிறோம். இன்று வாலிபர்களாகிய நாமும் தேவன் நமக்குத் தந்த நல்ல கிறிஸ்தவ குடும்பத்தில்தான் இருக்கிறோம். நல்ல ஆவிக்குரிய திருச்சபையில் தான் இருக்கிறோம். ஆனால் ஆவிக்குரிய வாழ்க்கையில் தேவனுடைய பார்வையில் எங்கே இருக்கிறோம்? தேவனுடைய பிரசன்னத்தில் நாம் இருக்கிறோமா? இல்லை, தேவனுடைய சந்நிதிக்கு விலகி நம்மை நாமே ஒளித்துக்கொண்டு இருக்கிறோமா? நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம்.

ஆதாம் தேவனுடைய சந்நிதியை விட்டு விலகியதற்கு முக்கிய காரணம், அவன் செய்த பாவமே. தேவனுக்குப் பிரியமில்லாத பாவமான செயல்களை நாம் செய்யும்போது அது தேவ சமூகத்தை விட்டு நம்மை பிரித்து விடுகிறது. நம்முடைய அக்கிரமங்களே நமக்கும், தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்கியது (ஏசாயா. 59:2) என்று வேதம் கூறுகிறது. தற்காலிக சந்தோஷத்திற்காக, சின்ன சின்ன சிற்றின்பங்களுக்காக நாம் தேவனுடைய ஐக்கியத்தை இழந்து பாவத்தில் சிக்கிவிடுகிறோம். பாவம் நம்மை ஆண்டுகொள்ள இடம் கொடுத்து விடுகிறோம். இன்று நாம் வாழும் தொழில்நுட்ப உலகில் பாவம் செய்வதற்கு அநேக வாய்ப்புகள் காத்துக்கொண்டு இருக்கிறது. குறிப்பாக, செல்போன், சமூக வலைதளங்கள், ஊடகங்கள் மூலமாக நாம் கேட்கிற, பார்க்கிற காரியங்களில் கவனம் தேவை. தேவனுக்குப் பிரியமுள்ளதை பார்க்கிறோமா, கேட்கிறோமா, இல்லை Privacy என்ற பெயரில் தேவன் பிரியப்படாத காரியங்களில் ஈடுபாடு கொண்டு உள்ளோமா என்ற கேள்வியை உங்களுக்குள் கேட்டுப்பாருங்கள்.

சமீபத்திய நாட்களில் Social media addiction மாணவர்கள், இளம் தலைமுறையின் மத்தியில் அதிகமாக ஊடுருவிக்கொண்டு உள்ளது. இந்த காலகட்டத்தில் Youtube, Facebook, Instagram போன்ற சமூக வலைதளங்களில் இல்லாத மாணவர்களே இல்லை. இதில் மூழ்கி வாழ்க்கையை இழந்தவர்கள் அநேகர் உண்டு.

அன்பார்ந்த வாலிபர்களே தேவனுடைய இரட்சிப்பைப் பெற்ற நாமும் அநேக நேரங்களில் இப்படிப்பட்ட அடிமைத்தனத்தில் சிக்கியிருப்பது உண்மையே. தேவனுடைய சமூகத்தைவிட்டு விலகி இப்படிப்பட்ட அடிமைத்தனத்தினால் உங்களை ஒளித்துக்கொண்டு உள்ளீர்களா? என்று ஆராய்ந்து பாருங்கள்.

நமது உடலில் பெலவீனம் ஏற்பட்டால் அதை சரிசெய்ய மருத்தவரைத் தேடிச்செல்கிறோம். வீடு கட்ட பிரயாசப்பட்டால் நல்ல பொறியாளரைத் தேடிச் செல்கிறோம். நல்ல வேலை வாய்ப்பிற்காக நல்ல அலுவலகங்களைத் தேடிச்சென்று வேலை கிடைக்க பிரயாசப்படுகிறோம். ஆனால், நம் அடிமைத்தனத்தில் இருந்து விடுபட யாரைத் தேடிச் செல்கிறோம்? பாவம் செய்த ஆதாம் தன்னை மறைத்துக்கொண்டானே தவிர தேவனைத்

தேடவில்லை. ஆனால், மனிதன் பாவம் செய்ததை தேவன் அறிந்து இருந்தும் ஏதேன் தோட்டத்தில் மனிதனைத் தேடிவந்தார்.

மனிதர்களாகிய நாம் அநேக நேரங்களில் தவறுகிறோம். எல்லோரும் பாவம் செய்து தேவமகிமையற்றவர்களாகிவிடுகிறோம் (ரோமர் 3:23). ஆனால், நாம் தொடர்ந்து பரிசுத்த ஆவியியானவரின் பெலத்தினால் பாவத்தை ஜெயித்து தேவ சமூகத்தைத் தேட வேண்டும். நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தைத் தள்ளிவிட்டு இயேசுவை நோக்கி பொறுமையோடே ஓடக்கடவோம் (எபி. 12:1) என்று வேதத்தில் வாசிக்கிறோம். பாவத்தை வெறுத்து அதை ஜெயிக்க பரிசுத்த ஆவியின் உதவியை நாடுங்கள். மறுபடியும் உங்களை அடிமைப்படுத்தும் காரியங்களை விட்டு விலகி தேவனுடைய சமூகத்துக்குத் திரும்ப முயற்சி எடுங்கள். தேவனுடைய ஐக்கியத்தை, ஜெபத்தின் மூலம், வேதவாசிப்பின் மூலம் பலப்படுத்துங்கள். கர்த்தர் உங்கள் மூலம் மகத்துவமான காரியங்களைச் செய்வார். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

**பாஸ்டர். ஜோஸப் சாமுவேல்**

## ஞானவானின் குணாதிசயங்கள்

(நீதிமொழிகள் புத்தகத்திலிருந்து)

1. ஞானமுள்ளவன் தன்னை கடிந்துகொள்பவனை நேசிப்பான்.
**"ஞானமுள்ளவனைக் கடிந்துகொள், அவன் உன்னை நேசிப்பான்." நீதி.9:8**

2. ஞானமுள்ளவன் இயற்கை கற்றுத்தரும் பாடங்களை கற்றுக்கொள்ளுவான்.
**"சோம்பேறியே, நீ எறும்பினிடத்தில் போய், அதின் வழிகளில் பார்த்து, ஞானத்தைக் கற்றுக்கொள்." நீதி.6:6.**

3. ஞானமுள்ளவன் தன் தகப்பனைச் சந்தோஷப்படுத்துகிறான்.
**"ஞானமுள்ள மகன் தகப்பனைச் சந்தோஷப்படுத்துகிறான்; மூடனோ தாய்க்குச் சஞ்சலமாயிருக்கிறான்." நீதி. 10:1**

4. ஞானமுள்ளவன் தேவனுடைய வார்த்தையை நேசிக்கிறான்.
**"இருதயத்தில் ஞானமுள்ளவன் கட்டளைகளை ஏற்றுக்கொள்ளுகிறான்" நீதி. 10:8**

5. ஞானமுள்ளவன் தன் நாவை அடக்குகிறான்.
**"தன் உதடுகளை அடக்குகிறவனோ புத்திமான்" நீதி. 12:19; 17:27, 28**

6. ஞானமுள்ளவன் ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துகிறான்.
**"ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக்கொள்ளுகிறவன் ஞானமுள்ளவன்" நீதி. 11:30.**

7. ஞானமுள்ளவன் ஆலோசகர்களுக்கு செவிக்கொடுக்கிறான்.
**"ஆலோசனைக்குச் செவிகொடுக்கிறவனோ ஞானமுள்ளவன்" நீதி. 12:15; 13, 10.**

8. ஞானமுள்ளவன் ஞானமுள்ளவர்களோடு நட்பு வைக்கிறான்.
**"ஞானிகளோடே சஞ்சரிக்கிறவன் ஞானமடைவான், மூடருக்கு தோழனோ நாசமடைவான்" நீதி. 13:20.**

9. ஞானமுள்ளவன் தன்னுடைய அறிவை சரியாக பயன்படுத்துவான்.
**"ஞானிகளின் நாவு அறிவை உபயோகப்படுத்தும்; மூடரின் வாயோ புத்தியீனத்தைக் கக்கும்" நீதி. 15:2, 7.**

10. ஞானமுள்ளவன் தனக்கு மேலான அதிகாரிகளிடத்தில் சண்டையிடமாட்டான்.
**"ராஜாவின் கோபம் மரணதூதருக்கு சமானம், ஞானமுள்ளவனோ அதை ஆற்றுவான்"நீதி. 16:14.**

# Jesus is coming Soon!

**_Rev. Dr. Jerry Daniel_**

*"Jesus is Coming Soon!" (Rev. 22:12,20)*

The Second Coming of Christ is given a great deal of importance in the bible and the study of it will enable us to be prepared for that great event. There are many more prophecies in the Old Testament relating to the Second Coming of Christ than there are relating to His first coming. The Second Coming of Christ is explicitly referred to 1,845 times in the Bible. It has been computed that 318 verses in New Testament refer to His return which is equal to approximately once in every twenty-five verses! 23 out of 27 books in the New Testament refer to this great and glorious event. To some this event could be a SHOCKING reality; to those who don't follow Christ, it may be a SAD reality; to the saved it will be a SWEET reality, but to all it will be SURE reality.

**I. The PROMISE of the Second Coming**

✦ Jesus promised about His second coming – "And if I go and prepare a place for you, I will come again and will take you to myself, that where I am you may be also" (John 14:3)

✦ The Angels predicted the second coming – After Jesus had ascended to heaven, the angels said in Acts 1:11, "Men of Galilee, why do you stand looking into heaven? This Jesus, who was taken up from you into heaven, will come in the same way as you saw him go into heaven.'

✦ The Apostles preached about the second coming – Paul says, 'For the Lord himself will descend from heaven with a cry of command, with the voice of an archangel, and with the sound of the trumpet of God (1 Thess. 4:16; I Cor. 15:51). Apostles James, John and Peter explicitly taught Jesus is coming again (Jas. 5: 7; I Jn. 3: 2; 2 Pet. 1: 16).

**II. The PURPOSE of the Second Coming**

✦ To fulfill His promise and the prophecies. Jesus is coming back to fulfill the promises he had made (Rev. 22:12, 20; John 14:3). There are hundreds of prophecies both in the old Testament and the New testament concerning the second advent of Jesus. Jesus is coming back to fulfill them all.

✦ To raise all the dead and translate the living. Jesus shall raise all the dead. The dead in Christ shall rise first followed by others (I Thess. 4:16; 1 Cor.15:51-52).

✦ To reward God's people. Jesus will come in the glory of His father with His angels, and then reward everyone according to his works (Matt. 16:27; Rev. 22:12).

- ✦ To execute righteous judgment on the wicked. 2 Thessalonians 1:7-8 says, `The Lord Jesus will be revealed from heaven with his mighty angels in flaming fire, inflicting vengeance on those who do not know God and on those who do not obey the gospel of our Lord Jesus.' (cf. Jude 14, 15)
- ✦ To establish his kingdom on the earth and to reign forever. Jesus will rule the earth as the King of kings. His dominion is an everlasting dominion which shall never end (Dan. 7:14; Rev. 19:11, 16).

**III. The PERIOD of the Second Coming**

Jesus said, “But concerning that day or that hour, no one knows, not even the angels in heaven, nor the Son, but only the Father” (Mark 13:32). The point He is making is that it is foolish to try and set dates concerning the Lord's return. No one knows the time when the Lord will return. There is no point in speculating about it. He will come like a thief (I Thess. 5:2). But the Bible describes several events which must occur before the Second Coming. The signs tell us that his coming is imminent. The first century Christians greeted each other saying, “Maranatha,” or “Come, O Lord (I Cor. 16:22). If the first century Christians lived in such an eager anticipation of His return, how much more we need to be! For in just a little while, He who is coming will come and will not delay (Heb. 10:37).

**IV. The PREPARATION for the Second Coming**

The early church thought more about the Second Coming of Jesus Christ than about death or about heaven. The early Christians were not looking for a cleft in the ground called a grave but for a cleavage in the sky called Glory. They were watching not for the undertaker but for the upper taker. The saints of God have lived with an eager expectation of Christ's return. How can we also live in the light of His coming? Here are some practical ways for preparing ourselves for His glorious coming.

**1. PURIFY Yourself**

The Bible stresses the importance of holiness in awaiting Christ's return. I John 3:2,3 says, `Abide in Him, so that when he appears we may have confidence and not shrink from him in shame at his coming...Everyone who thus hopes in him purifies himself as he is pure.' The Lord who comes is holy and pure. Without holiness, no one can see God (Heb. 12:14). The world is becoming more and more filthy and wicked (Matt. 24:12). But God expects his people to be more and more holy (Rev. 22:11, 12). God has given his provisions for us to live a holy life. The blood of Jesus (I John 1:7), the Word of God (Ps. 119:9; John 17:17) and the Spirit of God (II Thess. 2:13) are the means by which we can be made holy. We must strive to be holy in our thoughts,

words, deeds and relationships (Phil. 1:10-11; I Thess. 3:13; 5:23; I Tim. 6:14; II Peter 3:10-12).

**2.PRAY with Watchfulness**

Another strongest emphasis in the Bible in regard to second coming of Jesus is the importance of being watchful. Jesus said, `Be always on the watch, and pray that you may be able to escape all that is about to happen, and that you may be able to stand before the Son of Man' (Luke 21:36). The world is busier than ever. Eventhough we have a lot of gadgets to do things faster, we don't have much spare time. The victim is always the prayer time. The enemy keeps devising new strategies to lull us to sleep by telling us that we have plenty of time. Jesus, in Mark 13: 32-37 repeatedly says that we need to be watchful. He reinforces the importance of watchfulness in the parable of ten virgins (Matt. 25: 1-13). The more time we spend with Him, the more alert we will be spiritually. Paul in the context of his teaching on Christ's return says that we should be praying without ceasing (I Thess. 5:17). Apostle Peter says, `the end of all things is near. Therefore be clear minded and self-controlled so that you can pray' (I Pet. 4:7). Someone said, `Pray when you feel like praying, pray when you don't feel like praying and pray until you feel like praying.'

**3. PROCLAIM the Gospel**

Paul tells Timothy, 'In view of Christ's appearing and his kingdom, I give you this charge: Preach the word' (II Tim. 4:2). This injunction to Timothy applies to all of us. We are not only to purify ourselves and pray, we are also called to proclaim the gospel. The Lord wants everyone to be evangelized (I Pet. 3:9). Jesus said, 'the gospel of the kingdom will be preached in the whole world and then the end will come' (Matt. 24:12). Do not be ashamed to share the gospel (Rom. 1:16). Paul says, `Woe to me if I don't preach the gospel' (I Cor. 9:16). Jesus said, `Whoever acknowledges me before men, I will also acknowledge him before my father in heaven. Whoever disowns me before men, I will disown him before my father in heaven' (Matt. 10:32, 33). Moreover the Lord has given all of us tasks to perform and talents to use, and He expects us to faithfully do it until He returns (Matt. 25:14-30).

Are you ready for His coming? If Jesus were to return today, would He find you faithfully serving Him and carrying out His will in the world? Or, would He find you skating around the edges, holding hands with the world? Would He find you inactive in the church? Would He find you doing His will or doing as you will? I challenge you to look at yourself and your walk with the Lord in the light of His coming. Do you want Him to come while you are living the life you are living right now?

# The Role of a Believer in the Church

God desires that every believer must do his or her part for the growth of the church and for the establishment of His Kingdom. If every child of God does the following in their church, then that church will be blessed and will become a blessing.

**1. Be Steadfast in prayer**:

The greatest thing that a believer can do for the growth and blessing of the church is to pray. Apostle Paul says, that we must pray for all (1Tim. 2:1) and that we must pray for all saints (Eph. 6:18). A church's victory depends on the prayers of the believers only (Exodus 17: 8-13). Pray for your pastor daily; pray that God may use him mightily in the ministry; pray that the pastor may be led to lead according to God's will. Pray for his good health, wisdom, anointing and for manifestation of God's grace in his life. Pray for one another (James 5:16). Pray for the leaders and all believers in the church. Pray for the revival and growth of the church every day.

**2. Do not forsake Assembling together:**

Hebrews 10:25 instructs, “Do not give up meeting together”. Give importance to Sunday corporate worship. Dedicate the first day of the week to God and gather to worship, pray and listen to God's word along with the people of God at church. Participate in every Sunday worship with faith and expectation. Plead with God to speak to you. Have a diary and pen to take notes of the pastor's sermon. Be willing to obey immediately to that which God speaks to you. Make efforts to be on time to church, as the Lord declares, “For those who honour me I will honour” (1 Samuel 2:30).

**3. Show Love:**

Love everyone in the church. Do to others what you want them to do to you (Matthew 7:12). Express your love in words and deeds. Encourage believers; forgive; help those in need as much as you can. In humility value others more than yourselves (Phil 2:3). “Love one another”, is repeatedly mentioned (sixteen times) in the New Testament (John 13:34). The new comers to church wish to see love in action in the believers.

**4. Preserve Unity:**

Bible says, “Make every effort to keep the unity of the Spirit through the bond of peace” (Eph. 4:3). Unity brings the blessings of God into the church. Whereas, separation, strifes, jealousy and disputes are tools that Satan uses to ruin the church. Therefore, get rid of all backbiting, anger, bitterness etc (Eph. 4:31). God has given to us the ministry of reconciliation (2Corin. 5:18). Let us make every effort to follow what leads to peace and mutual edification (Romans 14:19). The Lord Jesus said, “Blessed are the peace makers for they will be called the children of God” (Matthew 5:9).

**5. Use the Gifts of God:**

God has given gifts to every redeemed and anointed believer. Find out your gifts and use them for the betterment of the church. Be a partaker in the ministry and not just a spectator (1 Cor. 12:8-10; 1Peter 4:10; Romans 12:6-8). Fan into flame the gifts that God has given you (1Tim 1:6). This means to keep using the gifts God has given you, to serve Him. As far as possible, help your pastor in doing the ministry and fulfil the vision of the church. Join the prayer-cells and be active. Participate in the training programs, Bible studies conducted in the church and develop your abilities. Jesus said, "My Father will honour the one who serves me" (John 12:26).

**6. Invest your Money:**

You must pay your full tithes to the church where you belong; for it nourishes your soul and nurtures you spiritually (Malachi 3:8-12). Honour the Lord with the first fruits of your income (Prov. 3:9-10). Give cheerfully towards the ministerial needs (2Corin. 9:7). We cannot reap material blessings and harvest without investing in the Kingdom of God. The Bible says, "Whoever sows sparingly will also reap sparingly; whoever sows generously will also reap generously". (2Corin 9:6)

**7. Win Souls:**

You are the salt of the earth and light of the world (Matthew 5:13-14). Wherever we live, we must live as witnesses for God, share the gospel and win souls. He or she, who does not try to fulfil the Great Commission of Jesus, is a Christian without the life of Christ in him/her. (Matt 28:18-20). The one who does not labour to win souls will backslide easily. Endear your kith and kin and relatives; befriend your co-workers and neighbours; pray for their salvation; invite, bring them to church. Do the work of an evangelist continually (2Tim 4:5; Mark 16:15) and keep spreading gospel to all. Determine to set a goal this year to win at least two souls; lead them to salvation, baptism and discipleship.

Only when you decide to do the seven duties discussed above, can you become the pillar in the church. Moreover, when we carry out these requirements, the church will grow fast. There will be the joy and power of God in the church. The Kingdom of God will be established. God bless you.

Translated by ***Mrs. Susanna John***



**பிரதி ஞாயிறு மாலை**

**ஆராதனையும் வேதப்பாடமும்**

**WORSHIP & WORD STUDY**

**6.30 PM**

தலைப்பு : **புதிய ஏற்பாடு கதாபாத்திரங்கள்**

Topic : **NEW TESTAMENT CHARACTERS**

## நாம் தாங்கும் மிஷினரிகளுக்காக ஜெபியுங்கள்
## Pray for the Missionaries we Support



மிஷனரி. **சூரிய நாராயண தாபா -** திருமதி. **ரஞ்சிதா லாபாங் தாபா**
Missionary. **Surya Narayana Thapa -** Mrs. **Ranjitha Lapang Thapa**
(அஸ்ஸாம் - Assam)



மிஷனரி. **சாமுவேல் -** திருமதி. **சண்முக பிரியா**
Missionary. **Samuel -** Mrs. **Shanmuga Priya**
(மேற்கு வங்காளம் - West Bengal)



மிஷனரி. **இயேசு பிரகாஷ் -** திருமதி. **சுனந்தா பெல்லி**
Missionary. **Yesu Prakash -** Mrs. **Sunanda Belly**
(மஹாராஷ்திரா - Maharasthra)



மிஷனரி. **ஜோசுவா பாக்-** திருமதி. **சில்பா பாக்**
Missionary. **Joshua Bagh -** Mrs. **Silpa Bagh**
(ஒடிசா - Odissa)



மிஷனரி. **யுவராஜ் -** திருமதி. **ஜெய்ஸ்ரீ**
Missionary. **Yuvaraj -** Mrs. **Jaishree**
(ராஜஸ்தான் - Rajastan)

# CHARACTERISTICS OF A WISE PERSON

(From the Book of Proverbs)

1. A wise person will love one who rebukes him.
   *"Rebuke a wise man, and he will love you" (Proverbs 9:8).*
2. The wise will consider the lessons of nature.
   *"Go to the ant, you sluggard; consider its ways, and be wise" (Proverbs 6:6).*
3. A wise son delights the heart of his father.
   *"A wise son brings joy to his father" (Proverbs 10:1).*
4. A wise person loves the law of God.
   *"The wise in heart will receive commandments" (Proverbs 10:8).*
5. A wise person controls his tongue.
   *"He who holds his tongue is wise" (Proverbs 10:19).*
6. A wise person wins others to Christ.
   *"He who wins souls is wise" (Proverbs 11:30).*
7. A wise person listens to counsel and instruction.
   *"He who listens to counsel is wise" (Proverbs 12:15).*
   *"A wise son heeds his father's instruction" (Proverbs 13:1).*
8. A wise person makes friends with the wise.
   *"He who walks with wise men shall be wise" (Proverbs 13:20).*
9. A wise person knows how to use information in the right way.
   *"The tongue of the wise uses knowledge aright: but the mouth of fools pours out foolishness" (Proverbs 15:2).*
10. A wise person will avoid conflicts with leaders.
    *"The wrath of a king is as messengers of death: but a wise man will pacify it" (Proverbs 16:14).*
11. A wise person will learn how to give precise answers.
    *"The heart of the wise teaches his mouth and adds persuasiveness to his lips" (Proverbs 16:23).*
12. A wise person knows how to give good counsel.
    *"The lips of the wise disperse knowledge" (Proverbs 15:7).*

# Voice From Hell and Heaven!

- You were my neighbour and I used to watch you go to church. I was a child and my parents took me to places to worship gods. You had a black book with you which I later came to know as the Bible. Now I am screaming in hell. You are happy in heaven. Why didn't you tell me about heaven and hell? We lived as neighbours for many, many years. Didn't you have the time? Did you think it is immaterial whether I go to heaven or hell? Didn't you care for me? Why, O why?
- You used to regularly visit my shop to buy groceries. I was kind to you and always served you with a smile. Did my face tell you that I would rebuff your talk about your God? No madam, I went from place to place in search of God. I died in an accident and landed in this terrible place. The devils are torturing me. I think about you all the time. If only you had given a pamphlet to me about your God, or a book, I would have escaped this place. Why were you so cruel to me?
- I travelled in the train with you for nearly three hours. You sat next to me. You read your Bible. I was curious to know about your God and the Bible. You talked to me nicely. You even shared your snacks with me. But you didn't say anything about your God. Now I know your God is the true God. Why didn't you talk about religion? Now I am burning in hell. Why, O why?
- Teacher, O teacher, I was your pupil for two years. Then I went to another class but met you ever so often. When I was in the eleventh standard I developed cancer and died. Ma'am, why were you so unkind to me? You loved me and taught the lessons so well. But that has not helped me to fi nd the most important truth in life. I am living among worms. I am dreaming about the beautiful place you'll go to. Why did you cheat me of the greatest truth in all the world? Why, O why?
- I was sitting by your side while waiting to see the doctor. I was going through hell in life and was contemplating suicide. You abruptly asked me if I knew about Jesus. Then you told me how I can find peace by trusting in Jesus. I said I wanted to go to your home and talk to you. You replied that you'd be late after seeing the doctor. I was willing to wait. I waited and you took me to your home. There I knelt down and accepted Jesus Christ as my Saviour. You gave me a Bible. I am in heaven with God the Father, Jesus Christ His Son and all the children of God. I am waiting to hug you and thank you. If only you did not boldly open your mouth to talk to me! If only you had thought, Bible was too costly a gift! today I'd be writhing in hell. Thank you sir, a million thanks to you.

*-www. lilianstanley.com*

I will make a helper suitable for him. Gen 2:18

# AGAPE CHRISTIAN MATRIMONY

*Helping you to find your life partner*

*Venue :* **CITY REVIVAL AG CHURCH**

Tuesday & Friday at 4.00 p.m to 6.30 p.m
Thursday at 10.30 a.m to 1.00 p.m

**Contact : 98438 51115**



# ஆண்கள் ஐக்கியம்
# Men's Fellowship

**ஒவ்வொரு மாதமும் 3-வது திங்கட்கிழமை மாலை 6.30 மணி**

ஆண்கள் அனைவரும் பங்குபெறுங்கள்.

# பெண்கள் எழுப்புதல் ஜெபம்
## LADIES REVIVAL PRAYER

வியாழன் தோறும்
காலை 10.30 மணி முதல் 1.00 மணி வரை



# வாலிபர் ஐக்கியக் கூடுகை
# Youth Fellowship

*முதல் மற்றும் மூன்றாம் ஞாயிறு*
*மாலை 4.30 மணி*



வாலிப சகோதர, சகோதரிகள் அனைவரும் பங்குபெறுங்கள்.

## Your Offerings and Donations Can Be Sent to

A/c Name : City Revival AG Church
A/c Number : 35354599169
Bank Name : STATE BANK OF INDIA
IFSC Code : SBIN0000930
Branch Code : 00930

A/c Name : City Revival AG Church
A/c Number : 1196172000007824
Bank Name : KARUR VYSYA BANK
IFSC Code : KVBL0001196
Branch Code : 001196

## Sunday Services - ஞாயிறு ஆராதனைகள்

| | | |
|---|---|---|
| I Tamil Service | 7.00 am - 8.45 am | முதல் தமிழ் ஆராதனை |
| English Service | 9.00 am - 10.45 am | ஆங்கில ஆராதனை |
| II Tamil Service | 11.00 am - 12.30 pm | 2-ம் தமிழ் ஆராதனை |
| Evening Service | 6.30 pm - 8.00 pm | மாலை ஆராதனை |
| Children Service | 7.30 am, 9.30 am | சிறுவர் ஆராதனை |
| Youth Meeting | 1st & 3rd Sunday-4.30 pm | வாலிபர் ஆராதனை |

## Weekly Meetings - வாராந்திர ஊழியங்கள்

| | | |
|---|---|---|
| Family Counselling | Tuesday - செவ்வாய்<br>10.30 am - 1.00 pm | குடும்ப ஆலோசனை |
| Women's Prayer | Thursday - வியாழன்<br>10.30 am - 1.00 pm | பெண்கள் ஜெபம் |
| Men's Fellowship | 3rd Monday -<br>மூன்றாம் திங்கள்<br>7.00 pm - 8.30 pm | ஆண்கள் ஐக்கியம் |
| Youth Fellowship | 1st & 3rd Sunday<br>முதல் மற்றும்<br>மூன்றாம் ஞாயிறு<br>4.30 pm - 6.00 pm | வாலிபர் கூடுகை |
| Prayer Cells | Wed/Thu -<br>புதன் / வியாழன்<br>7.00 pm - 8.00 pm | ஜெபக்குழுக்கள் |
| Intercessory Night Prayer | 1st Friday -<br>முதல் வெள்ளி<br>7.00 pm - 10.00 pm | மன்றாட்டு இரவு ஜெபம் |
| Chain Prayer | 4th Friday -<br>நான்காம் வெள்ளி<br>6.00 a.m - 6.00 a.m | சங்கிலி ஜெபம் |
| Early Morning Communion Service | 1st Day of the Month,<br>மாதத்தின் முதல் நாள்<br>5.00 a.m - 6.30 a.m | அதிகாலை திருவிருந்து ஆராதனை |

**Assistant Pastors**

Pr. I. Joseph Samuel
88700 74415
Pr. S. Santhosh Yobu
95973 28741

**Scan & Pay**

Paytm G Pay PhonePe

# City Revival A.G. Church

*Warmly Welcomes you to the*

# PRAISE & WORSHIP SERVICES

**EVERY SUNDAY**

Tamil Service - 7.00 a.m, 11.00 a.m
English Service - 9.00 a.m
Evening Service - 6.30 p.m

**ஞாயிறு தோறும்**

தமிழ் ஆராதனை 7.00 மணி, 11.00 மணி
ஆங்கில ஆராதனை 9.00 மணி
மாலை ஆராதனை 6.30 மணி

**Venue : A/c Hall, 1st Floor, JENNE PLAZA,**
No.5, Bharathiyar Salai, (Near Head Post Office),
Cantonment, Trichy - 1.

Anointed and Lively Worship, Soul-stirring Music
& Practical, Life-changing Messages

*Come with your friends & family &*
*Receive the blessings of God*



Sunday School is conducted for
kids below 14 years





**Rev. Dr. JERRY DANIEL**
Cell : 94434 15484, 98423 15484
www.facebook.com/jerrydanieltrichy
jerrydanieltrichy@gmail.com
www.cityrevivalagchurch.org